**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**RLTOP. No.46/*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tr.Durairaj Junior Assistant in accordance with the provisions of Act X of 1873 on 10.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name | Mohan Kumar | Religion | Hindu |
| Husband Name | Singarajan | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | **PW1** |

**Chief**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். பாகப்பிரிவினை பத்திரம் நாள்.06.10.2003 வா.த.சா.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடை வாடகை ஒப்பந்த பத்திரம் நாள்.01.07.2005 வா.த.சா.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது (எதிர்மனுதாரருடைய வழக்கறிஞரின் ஆட்சேயபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). Power of Attorney நாள்.02.02.2007 வா.த.சா.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது . இறப்புச் சான்றிதழ் வா.த.சா.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புதிய மதிப்பீடு வா.த.சா.**5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அறிவிப்பு.10A, திருத்த அறிவிப்பு வா.த.சா.**6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நில வரி ரசீது வா.த.சா.**7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தண்ணீர் வரி ரசீது வா.த.சா.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா நாள்.26.09.2024 வா.த.சா.**9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Property Tax Receipt வா.த.சா.**10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ பதிவேடு விவரங்கள் வா.த.சா.**11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அடங்கல் வா.த.சா.**12** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. மின்கட்டண அட்டை வா.த.சா.**13** ஆக குறியீடு செய்யப்படுகிறது . வில்லங்க சான்று வா.த.சா.**14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தா.வா. படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**Sd/- M.N. Rajanandhivarmasiva,**
**District Munsif cum**
**Judicial Magistrate,**
**Sholinganallur.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**RLTOP . No.46 /*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tr.Durairaj Junior Assistant in accordance with the provisions of Act X of 1873 on 10.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name | S.Mohan Kumar | Religion | Hindu |
| Father Name | Singarajan | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | |

**Cross**

1. எதிர்மனுதாரரின் பெயர் கோபால் ஆகும். மனு சொத்து எனது தந்தை இறந்த பின்பு வாரிசு என்ற அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மா சா ஆ 2 இல் எதிர் மனுதாரர் பெயர் கோபாராம் என்று குறிப்பிட்டுள்ளது கோபால் ராம் என்று இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் 2005 ஆம் ஆண்டு வாடகைக்கு வந்தார். ஜூன் மாதம் என்று நினைக்கிறேன். ஜூன் மாதத்தில் ஒரு கடைக்கு 2,000 என்று இரண்டு கடைக்கு 4,000 வாடகை நிர்ணயம் செய்தேன். வாடகை ஒப்பந்த பத்திரத்தில் சொத்து விவரத்தில் இரண்டு கடை என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை.

2. கடைக்கு தலா 2,000 என்று வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வாடகை விடப்பட்டுள்ள இடத்தின் மொத்த விஸ்தீரணம் 4,050 சதுர அடி ஆகும். இந்திரா காந்தி சாலை வழியாக 83 அடி ஆகும், மறுபக்கம் 84 அடி ஆகும், சாலை ஓரம் பக்கம் 48 அடி ஆகும். ராஜீவ் காந்தி சாலையில் 48 அடி அகலம் ஆகும். பின்பக்கத்தின் நிலம் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. பின்பக்கத்தில் நாங்கள் விற்பனை செய்த

இடம் பக்கத்தில் உள்ள இடம் தான் யாருடையது என்று எனக்கு தெரியாது. மனுசொத்தின் நான்கு எல்லைகள் எனக்கு யாருடையது என்று தெரியாது என்றால் ஒரு பக்கம் மட்டும் தான் எனக்கு தெரியாது மற்ற மூன்று பக்கங்கள் விவரங்கள் எனக்கு தெரியும்.

3. சொத்து விவரத்தில் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 4,050 சதுர அடியில் முன்பக்கத்தில் மட்டும் சுமார் 1,350 சதுர அடியில் காங்கிரீட் பில்டிங்குடன் ஐந்து கடைகள் உள்ளன. பின் பக்கத்தில் சுமார் 150 சதுர அடியில் கான்கிரீட் பில்டிங் உள்ளது. மொத்தம் ஐந்து கடையில் இரண்டு கடை மட்டும் எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மற்ற மூன்று கடைகள் நான் யாருக்கும் வாடகை விடவில்லை அதில் ஒரு கடையில் தான் கோபால் ராம் ஆக்கிரமித்துள்ளார். எதிர்மனுதாரிடம் வாடகை ஒப்பந்தம் செய்யும்பொழுது எத்தனை காலத்திற்காக வாடகை ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மீதி 3 கடைகள் சுமார் எத்தனை ஆண்டுகளாக காலியாக உள்ளது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

5. எதிர்மனுதாரருடன் முதலில் போடப்பட்ட ஒப்பந்தத்தின் காலம் சுமார் 11 மாத காலம் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரிடம் இருந்து வாடகை ஒப்பந்தத்திற்காக இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முன்பணமாக பெற்றேன். இவ் வழக்கை எதிர்மனுதாரிடம் பெறப்பட்ட முன் தொகையிலிருந்து வாடகை பணத்தை கழித்துக் கொண்டு தாக்கல் செய்தனா என்றால் இல்லை.

6. முதல் ஓராண்டு எதிர்மனுதாரர் கொடுக்கப்பட்ட வாடகைக்கான ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முதல் 11 மாதம் முடிந்த பின்பு வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தேனா என்றால் இல்லை. வாடகை ஒப்பந்தத்தை புதுப்பிக்காத காரணத்தினால் முதலில் இருந்து வாங்கிய அதே

வாடகையை தான் நாங்கள் வாங்கினோம். 01.06.2006 பின்பு எனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பத்மநாபன் என்பவருக்கு பவர் வழங்கப்பட்டது. அதன் பின்பு பத்மநாபனை வாடகையை அதிகப்படுத்தும் படி சொன்னதற்கு அவர் அதிகப்படுத்தவில்லை. பத்மநாபன் 2023 வரை அவர் உயிருடன் இருந்தவரை மாதம் ரூபாய் .35,000/- வாடகை கடைசியாக வாங்கப்பட்டது.

7. பத்மநாபன் பிள்ளை இறப்பதற்கு நான்கு அல்லது மூன்று மாதத்திற்கு முன்புதான் ரூபாய் 35,000/- வாடகை ஏற்றப்பட்டது. பத்மநாபன் பிள்ளைக்கு எனது தாயார் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பொது அதிகார பத்திரம் வழங்கப்பட்ட விவரத்தை எனது மனுவில் குறிப்பிட்டேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பத்மநாபன் பிள்ளைக்கு பொது அதிகாரம் பத்திரம் கொடுத்த விவரத்தை எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

8. பத்மநாபன் பிள்ளை வாடகையை ரூபாய்.35,000/- நேற்றைய வரை எவ்வளவு வாடகை எதிர்மனுதாரிடம் இருந்து பெறப்பட்ட விவரத்தை நீதிமன்றத்தில் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 16.03.2007 அன்று தான் பத்மநாபன் பிள்ளைக்கு பொது அதிகார பத்திரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தின் 1-வது ஐட்ட சொத்துதான் மனுசொத்து என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரம் விற்பனை செய்வதற்கும் மற்றும் சொத்து பத்திரத்தை பதிவு செய்வதற்காக தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

7. பொது அதிகார பத்திரம் பத்மநாபன் பிள்ளைக்கு பதிவு செய்து கொடுத்த பின்பு மனுசொத்தின் சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டேன் என்றால் சரியல்ல. வாடகை வாங்குவதற்காக மட்டும் தான் பொது அதிகார பத்திரம் வழங்கப்பட்டது. அசல் ஆவணத்தை பத்மநாபன் பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டேன்

என்றால் சரிதான். அசல் ஆவணத்தை பத்மநாபன் பிள்ளை என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் நான் தான் அவரிடம் இருக்க அனுமதி கொடுத்தேன்.

8. என்னிடம் காட்டப்படும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. 29.3.2006 அன்று நானும் எனது குடும்பத்தினரும் பத்மநாபன் பிள்ளைக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்து அதில் கையொப்பம் செய்தோம் என்றால் அது போல் எனக்கு எந்த ஞாபகம் இல்லை. நான் பத்மநாபன் பிள்ளைக்கு பொது அதிகார பத்திரம் பதிவு செய்த பின்பும் அதன் பின்பு விற்பனை செய்ய கிரைய ஒப்பந்த பத்திரமும் பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் மனு சொத்துக்காக விற்பனை செய்யவில்லை நான் விற்பனை செய்த இரண்டு சொத்துக்காக மட்டும் தான் முன்பணம் பெற்றேன்.

9. 2011 அன்று எனக்கும் பத்மநாபன் பிள்ளைக்கும் உள்ள கணக்கு வழக்குகளை முடித்துக் கொண்டேன் 111 இல் 5 இடத்தை பராமரிப்பதற்கும் வாடகை பெறுவதற்காக மட்டும் தான் பொது அதிகார பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டது. மனுசொத்திற்கு தவிர மற்ற இரண்டு சொத்து இருக்கும் நான் முன்பணம் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். மனு சொத்தையும் சேர்த்து பத்மநாபன் என்பவருக்கு நான் ஒப்பந்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. 16.03.2007 அன்று ரூபாய்.1,65,000/- பெற்றுக் கொண்டு மனுசொத்திற்கும் சேர்த்து விற்பனை செய்ததாக ரசீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 27 லட்சம் மட்டும் தான் டிடி பெற்றுக் கொண்டு 111 ல் 6 மற்றும் 111 ல் 7 என்ற சொத்தை விற்பனை செய்தேன். மனு சொத்தை தவிர மற்ற இரண்டு சொத்துக்களை விற்பனை செய்ததற்காக எவ்வளவு பணம் பத்மநாபன் என்று

வாங்கினேன் என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 2011 ஆம் ஆண்ட கணக்கு வழக்குகளை முடித்துக் கொண்டேன்.

11. எவ்வளவு சொத்துக்களை பத்மநாபனுக்கு விற்பனை செய்தேன் என்றும் அதற்காக எவ்வளவு பணம் பெற்றுக் கொண்டேன் என்ற விவரத்தையும் எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வாடகை சம்பந்தமாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் தவிர சொத்துக்களை குறித்து வழக்கு தாக்கல் செய்யாததால் அந்த விவரங்களை நான் குறிப்பிடவில்லை.

12. பத்மநாபன் பிள்ளைக்கு பொது அதிகார பத்திரம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர் இறக்கும் வரை அவர் கொடுக்கப்பட்ட பணம் மற்றும் வாடகையின் விவரங்களை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான் அவர் ரொக்கமாக தான் கொடுப்பார் ஊரில் இருந்து இரண்டு மற்றும் மூன்று மாதங்களுக்கு வரும் வரை நான் வரும்பொழுது ரொக்கமாக பெற்றுக் கொள்வேன். பத்மநாபன் பிள்ளை உயிருடன் இருக்கும் வரை எனக்கு சரியாக வாடகை வந்தது.

13. பத்மநாபன் பிள்ளை 20.6.2021 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மா சா ஆ 4 பத்மநாபன் பிள்ளையின் இறப்புச் சான்றிதழ் எனக்கு எப்படி கிடைத்தது என்று ஞாபகம் இல்லை அவர் இறந்த பின்பு நான் எடுத்தேன். 20.08.2021 இருந்து எதிர்மனுதாரர் வாடகை பாக்கி என்று எனது மனுவில் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். 20.8.2021 இல் இருந்து பத்மநாபன் பிள்ளை இறந்த பின்பு வாடகை எதிர்மனுதாரர் தராததை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினாரா என்றால் இல்லை, அவர் அடுத்த மாதத்தில் இருந்து வாடகை தருவதாக குறிப்பிட்டதால் எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை.

14. 2005 இல் இருந்து 2021 ஆகஸ்ட் மாதம் வரை நான் வாடகையாக பெற்ற பணத்தை வங்கியில் செலுத்தினேனா என்றால் எனக்கு வங்கியில் கணக்கு

உள்ளது ஆனால் அதை எனக்கு பயன்படுத்தத் தெரியாது எனக்கு ஏடிஎம் கார்டு இல்லை. வருமான வரி கணக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். வருமான வரி கணக்கில் பத்மநாபன் பிள்ளையிலிருந்து பெறப்பட்ட வாடகை மற்றும் பத்மநாதன் பிள்ளைக்கு விற்பனை செய்த சொத்துக்கு பெறப்பட்ட பணத்தைப் பற்றி வருமான வரி கணக்கில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் கொடுத்து இருப்பேன் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன் என்றால் தாக்கல் செய்வேன். அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்வேன் என்றால் நான் ஆடிட்டரை ஆலோசித்து தான் சொல்ல வேண்டும்.

15. வாடகை ஒப்பந்த பத்திரத்தின் அசல் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது வெள்ளத்தில் போய்விட்டது அதனால் தாக்கல் செய்யவில்லை. வெள்ளத்தில் வாடகை ஒப்பந்த பத்திரம் போய்விட்டது என்பதற்காக வட்டாட்சியரிடம் ஏதேனும் மனு கொடுத்து அதற்கு ஆவணப்படுத்தி உள்ளேனா என்றால் அதுபோல் ஏதும் செய்யவில்லை. பத்மநாபன் பிள்ளையிடம் மற்றொரு வாடகை ஒப்பந்த பத்திரம் போட சொல்லி இருந்தேன்.

16. வெள்ளத்தில் வாடகை ஒப்பந்த பத்திரத்தின் அசல் ஆவணம் சென்று விட்ட விவரங்களை எனது பிரமாண வாக்குமூலத்திலும் எனது மனுவிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பத்மநாபன் பிள்ளைக்கு பொது அதிகார பத்திரம் கொடுத்தவுடன் கிரைய ஒப்பந்த பத்திரத்தையும் பதிவு செய்துவிட்டு அதுக்காக கிரைய தொகையும் பெற்றுக் கொண்டு அதற்குண்டான ரசீதையும் நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பத்மநாபன் பிள்ளைக்கு கிரயம் கொடுத்த

மற்ற இரண்டு சொத்து கிரைய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

17. நான் கிரயம் கொடுத்ததால் தான் அசல் ஆவணங்களை பத்மநாபன் பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டேன் என்பதால் எனக்கு மனுசொத்தில் எந்த ஒரு பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. பத்மநாபன் பிள்ளை விஜயராஜும் எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் நான் எனது இரண்டு சொத்தையும் விற்பனை செய்துவிட்டு நான் இடம் வாங்க தேடிக் கொண்டிருந்தபோது அவர் இடம் இருப்பதாக கூறினார்.

18. பத்மநாபன் பிள்ளை இறந்த பின்பு அவரிடம் கொடுத்த அசல் ஆவணத்தை ஒப்படைக்க கோரி அவரின் வாரிசுகளிடம் அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் அறிவிப்பு எதுவும் தரவில்லை அவரிடம் மகனிடம் நான் கேட்டதற்கு அவர் வீட்டில் தான் உள்ளது தேடி பார்த்து தருகிறேன் என்று கூறியதால் அறிவிப்பு எதுவும் தரவில்லை. நான் விற்பனை செய்துவிட்டதால் தான் அசல் ஆவணங்களை திரும்ப கேட்டு எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரி அல்ல .

19. மா சா ஆ 5 ல் எதிர் மனுதாரருக்கு வாடகை விடப்பட்டதாக ஏதேனும் குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. மா சா ஆ 6 ல் எதிர் மனுதாரருக்கு வாடகை விடப்பட்டதாக ஏதேனும் குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. எனது கடைக்கு நான் வரி கட்டுவதை நிரூபிப்பதற்காக நான் இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மாசாஆ 5 மற்றும் மாசாஆ 6 ஆவணங்கள் 1,269 சதுர அடி மற்றும் 930 மற்றும் 1,269 மற்றும் 930 சதுர அடி அதற்கு உண்டான வரி ரசீது ஆகும். மாசாஆ 10 வரி ரசீது மனு சொத்துக்கு உண்டானது மட்டுமல்ல அங்குள்ள மொத்த கடைக்கும் சேர்த்து தான் என்றால் சரிதான். மனுசொத்தின் கடைக்கான மின் கட்டணத்தை எதிர்மனுதாரர்

தான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். கோபால் ராம் தாக்கல் செய்த எதிர்உரையை நான் படித்து பார்த்தேன் என்றால் படித்து சொன்னார்கள்.

20. 16.03.2007 ல் ரூ.2,23,94,500/- பல்வேறு தேதிகளில் பெற்றுக் கொண்டு அதற்கு ரசீதுகள் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரி அல்ல. அதன் காரணமாக தான் பத்மநாப பிள்ளைக்கு கிரய ஒப்பந்தமும் கிரைய ரசீதையும் எழுதிக் கொடுத்து உள்ளேன் என்றால் சரியல்ல. பத்மநாபன் பிள்ளைக்கு கைகால் செயல் இழந்த காரணத்தை வைத்துக்கொண்டு அவருக்கு விற்பனை செய்த சொத்தை நான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல.

21. எனக்குள்ள மூணு ஐட்ட சொத்துக்களில் 30.12.2011 அன்று இரண்டு சொத்துக்களை எம்பெருமான் மற்றும் ஏழுமலை என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மனு சொத்தை பத்மநாபன் பிள்ளை எம்பெருமான் மற்றும் ஏழுமலைக்கு கிரயம் கொடுத்துவிட்டு கிரைய பத்திரம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. 2011 ஆம் ஆண்டு நான் என்னுடன் உள்ள கணக்கு வழக்குகளை பத்மநாபன் பிள்ளையிடம் முடித்துக் கொண்டதால் மேலும் பத்மநாபன் பிள்ளைக்கு வாடகை மற்றும் சொத்தை பராமரிக்க மட்டும் தான் பொது அதிகார பத்திரம் கொடுக்கப்பட்டதால் நான் கணக்கு வழக்குகளை முடித்துக் கொண்டேன்.

22. இரண்டு ஐட்ட சொத்துக்களை மட்டும் விற்பனை செய்து விட்டு ஒரு ஐட்ட சொத்துக்களை பராமரிக்க மற்றும் வாடகை வசூலிக்க மட்டும் கொடுக்கப்பட்டதாக எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் எனது மனுவில் குறிப்பிட்ட உள்ளன என்றால் இல்லை. பத்மநாபன் பிள்ளை இறந்த பின்பு எம்பெருமான் மற்றும் ஏழுமலை என்னை பலமுறை தொடர்பு கொண்டு மனு சொத்துக்களை எழுதி

கொடுக்கும்படி கேட்டார்கள் என்றால் என்னை கேட்கவில்லை என்னை ஆட்களை வைத்து மிரட்டினார்கள் கோபால்ராமிடமும் வாடகை கொடுக்க வேண்டாம் என்று மிரட்டினார்கள் அதனால் தான் வழக்கு தாக்கல் செய்தேன். மிரட்டிய விவரங்களை என் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் .

23. எம்பெருமானும் ஏழுமலையும் மனுசொத்தை விற்பனை செய்து தர வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் நான் வாங்கினேனா இல்லையா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஏழுமலையான் எம்பெருமானும் வழக்கு சொத்தை எதிர்மனுதாரருக்கு வாடகை விட்டு அவர்கள் தான் இந்நாள் வரை வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் கோபால் ராம் வாடகை என்னிடம் கொடுக்கவில்லை தவிர அவர் யாரிடம் வாடகை கொடுக்கிறார் என்று எனக்கு தெரியாது நான் கேட்கும் வரை வாடகை அடுத்த மாதம் தருகிறேன் என்று மட்டும் தான் கூறுகிறார்.

24. ஏழுமலைக்கும் எம்பெருமானுக்கும் வழக்கு சொத்தை கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது பற்றி தெரியும் என்றாலும் இவ்வழக்கு சொத்தை அபகரிப்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. ஏழுமலைக்கும் எம்பெருமானுக்கும் நான் பத்மநாபன் பிள்ளைக்கு பவர் கொடுத்ததின் அடிப்படையில் பிரின்சிபல் என்ற முறையில் நான் தான் அவர்களுக்கு கிரைய பத்திரம் பதிவு செய்து தர வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தும் மற்றும் 4,050 சதுர அடி அனைத்தும் ஏழுமலை மற்றும் எம்பெருமான் சுவாதீனத்தில் உள்ளது மேலும் அனைத்து அசல் ஆவணங்களும் அவர்கள் வசத்தில் தான் உள்ளது என்றால் சரி அல்ல என் சுவாதீனத்தில் தான் உள்ளது எனது சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல மனு சொத்தின் வரி அனைத்தும் நான் தான் செலுத்தி வருகிறேன். வரி ரசீது மற்றும் பட்டா

மனு சொத்தின் முழுமையான ஆவணம் அல்ல அது உரிமை மூலத்தை நிரூபிக்காது என்றால் சரியல்ல.

25. ஏழுமலையான் எம்பெருமானம் வழக்கு சொத்துக்களை தனது பெயருக்கு பதிவு செய்து தரச் சொல்லி மாண்புமிகு செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 218 /2025 என்ற வழக்கை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த வழக்குக்கான எந்த அறிவிப்பும் எனக்கு வரவில்லை. 2006 பின்பு எதிர்மனுதாரிடம் முதன் முதலில் போடப்பட்ட ஒப்பந்தத்தை தவிர நான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்ற முறையில் அவரிடம் நான் வாடகை விடவில்லை அவரிடம் அதன் பின்பு எந்த வாடகை வசூல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

26. எதிர்மனுதாரர் கோபால் ராம் எம்பெருமான் மற்றும் ஏழுமலையன் தான் இந்த நாள் வரை வாடகையாக ரூபாய் 40 ஆயிரம் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடமிருந்து வழக்கு சொத்தை அராஜகமான முறையில் கைப்பற்ற 02.09.2024 அன்று பிரச்சனை செய்ததால் காவல்துறையினில் புகார் அளிக்கப்பட்டு அதற்கு சிஎஸ்ஆர் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது சொத்து இடத்திற்கு சென்றேன் தவறான புகார் கொடுத்து அதற்கு சிஎஸ்ஆர் கொடுக்கவில்லை. நான் புகார் கொடுத்ததற்கு விசாரணை செய்ததற்காக விவரத்தை நான் எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை.

27. நான் மனுவில் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத் தக்கதல்ல என்றாலும் எதிர்மனுதாரர் எந்த வாடகையும் கொடுக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு செல்லதக்கதல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்குக்கு வியாஜிதம் மூலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண

வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றாலும் நாம் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/- M.N. Rajanandhivarmasiva,**
**District Munsif cum**
**Judicial Magistrate**
**Sholinganallur.**